மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்

Mount Druitt Tamil Study Centre

Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au


## ஆண்டு 3

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

இங்கு கூடி இருக்கும் அனைவருக்கும் அன்பான வணக்கம் .......

# உயிர்களிடத்து அன்பு வேண்டும்

" உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் - தெய்வம்
உண்மை என்று தானறிதல் வேண்டும் "

என்ற பாரதியாரின் கூற்றுக்கு இணங்க நாம் அனைவரும் உயிர்களிடத்தில் அன்பாக இருத்தல் வேண்டும்.

எல்லா உயிர்களையும் தன்னுயிராக போற்றும் பெரும் பண்பைக் கற்றுத் தருகின்ற மரபு எம் தமிழ்மொழிக்கே உண்டு.

அன்பானது அள்ள அள்ளக் குறையாது பெருகிக் கொண்டே இருக்கும். இதனைத் தாழ் இட்டு அடைத்து வைக்க முடியாது.

மாணவர்களாகிய நாமும் மனிதர்கள், பறவைகள், மிருகங்கள் என அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துவோம் எனக் கூறி விடை பெறுகின்றேன்.

நன்றி
வணக்கம்




திருமதி. கஜந்தி சதீஸ்கரன்
திருமதி .மேரி சேனல்


பேச்சுப் போட்டி எதிர்வரும் 06.06.2026 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.